மார்ச் 2008
விலை ரூ. 10

# ௐ சக்தி

ஆசிரியர் : நா. மகாலிங்கம்



ஸ்ரீ லட்சுமி நாராயணி திருக்கோயில் - வேலூர்





# ஒரே நாளில் தேர்தல் நடக்கட்டும்!

நா. மகாலிங்கம்

டெல்லி மாநகரில் சென்ற ஜனவரி இறுதியில் நடந்த பா.ஜ. கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தலை, சட்டப்பேரவைத் தேர்தலும் பல்வேறு கால கட்டங்களில் நடப்பது பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சென்ற 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாடாளுமன்றத் தேர்தலையும், மாநில சட்டமன்றத் தேர்தல்களையும் மட்டுமல்லாமல், உள்ளாட்சித் தேர்தல்களையும் ஒரே சமயத்தில் நடத்த வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறேன்.

இப்போதுதான் தேசிய அளவில் எதிர்க்கட்சியாக உள்ள பா.ஜ. கட்சி முதன் முதலாக இக்கருத்தின் ஒரு பாதியை எதிரொலித்துள்ளது.



1999-இல் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்குத் தலைமை ஏற்றிருந்த பா.ஜ. கட்சி, அப்போதே இந்த நடவடிக்கையை எடுத்திருந்தால், இப்போது சுமார் 10 ஆண்டுகள் ஆகியிருக்கும். ஆனால், எதிர்க்கட்சியாக உள்ள இப்போதுதான் பா.ஜ. கட்சித் தலைவர் திரு. ராஜ்நாத் சிங் இதனைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

இதுபோல நடந்த வேறு இரண்டு சம்பவங்களும் கவனிக்கத்தக்கவை.


Dr. MAHALINGAM COLLEGE OF
ENGINEERING & TECHNOLOGY
COURSES OFFERED
MCET - A Campus with Global Vision